இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - 2006
இறுதிப் பரீட்சை 2006 - மட்டம் 05
LWU 3311/4331 – நிர்வாகச் சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 27.04.2006 நேரம்: பி.ப 1.30 - பி.ப 4.30

5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "நெறிமுறையான எதிர்பார்ப்பு ஒன்று இருத்தலானது பல்வேறுபட்ட எண்ணிக்கையான விளைவுகளை ஏற்படுத்தும்: அது, நீதிமுறை மீளாய்வுக்கு விண்ணப்பிப்பதற்கான அனுமதியை பெறுவதற்குரிய வழக்கிடு தகைமையை வழங்கலாம்: இதனுடைய கருத்து என்னவெனில் பொது கொள்கை சம்பந்தப்பட்ட தகுந்த சில காரணங்கள் இல்லாமல் ஒருவருடைய எதிர்பார்ப்பை தோற்கடிக்க கூடிய வகையில் அதிகாரசபை தனது செயற்பாட்டை செயற்படுத்தக் கூடாது என்பதாகும்: அல்லது அதிகாரசபை ஒரு நபருடைய நெறிமுறையான எதிர்பார்ப்பை தோற்கடிக்க உத்தேசித்து இருக்குமாயின், அவ்விடயம் தொடர்பில் விளக்கம் அளிப்பதற்கு அவனுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். என்பதை குறிக்கிறது".

Halsbury, Halsbury's Law of England, 4th Edition, Vol (1), P. 151.

மேற் போந்த கூற்றை துணித்து பகுப்பாய்வு செய்க.

2. பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு(UGC) இரண்டு மாதங்களுக்கு முன்பு பலகலைக்கழக அனுமதிக்கான அளவு-கோள்களை வெளியிட்டது. நளினி கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்திற்கு அனுமதி கோரி விண்ணப்பித்தாள். அவள் அனுமதி ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டிருந்த தேவைப்படுத்தப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்தாள். முடிவுத்திகதிக்கு இரண்டு கிழமைக்கு முன்பாக அவளுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டமைபற்றிய பதிலை பெற்றாள். அக்கடிதத்தில், நிராகரிப்புக்கான எக்காரணத்தையும் குறிப்பிட்டிருக்கவில்லை. குறிப்பிட்ட அதிகாரசபைகளுடைய தீர்மானத்துக்கு எதிராக, காரணம் தருவதற்கு தவறியமை அடிப்படையில் தனக்கு வலிதான வழக்கு ஒன்று இருக்கின்றது என நளினி நம்பினாள்.

அவள், தன்னுடைய விண்ணபத்தை மீள்பரிசீலிக்குமாறு கோரி மேன்முறையீடு ஒன்றை சமர்ப்பித்தாள். மேன்முறையீட்டு சபை, அவளுடைய வழக்குக்கு அடுத்த கிழமை எதிர்வாதம் வேண்டியது. அவள் தன்சார்பாக சட்டத்தரணி ஒருவரை அமர்த்துவதற்கு மேன்முறையீட்டு சபையிடம் வேண்டிய போதிலும் சபை அக்கோரிக்கையை மறுத்தது. அவளுடைய வழக்கு கேட்கப்பட்டபோது அவளுடைய விண்ணபத்தை நிராகரித்த அதிகாரி, மேன்முறையீட்டு சபை தலைமை அதிகாரிக்கு அருகிலே அமர்ந்திருந்தார்.

விசாரணை முடிவின் போது, மேன்முறையீட்டு சபை முன்னைய தீர்மானத்தை உறுதிப்படுத்தியது. மேன்முறையீட்டு சபையின் தீர்மானத்தில் அவளுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணங்கள வரிசையாக குறிப்பிடப்பட்டிருந்தன.

நளினி, UGC உடைய தீர்மானத்தை இயற்கை நீதிகோட்பாடு விதிகள் மறுக்கப்பட்ட அடிப்படையின் மீது கேள்விக்கு உட்படுத்த விரும்புகிறாள்.

இயற்கை நீதி கோட்பாடு பரப்பின் நடப்பு அபிவிருத்திகளை குறிப்பிட்டு அவளுக்கு ஆலோசனை வழங்குக

3. சுற்றாடல் அமைச்சருக்கு, சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரத்தை(EPL) பெற்றுக்கொள்வதற்கான குறித்துரைக்கப்பட்ட செயற்திட்டங்களின் பட்டியலை பிரசுரிப்பதற்கு அதிகாரம் இருந்தது. அமைச்சர் இத்தீர்மானத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளை கருத்தில் எடுப்பதற்காக ஒரு குழுவை நியமித்தார். குழுவினுடைய சிபார்சுகளை அடிப்படையாக கொண்டு குறித்துரைக்கப்பட்ட செயற்திட்டங்களை அவள் அரச வர்த்தமானியிலே பிரசுரித்தாள். அமைச்சருக்கு அதிகாரத்தை வழங்கும் ஒழுங்கு விதிகளின் ஏற்பாடு ஒன்று "அமைச்சருடைய தீர்மானம் முற்றும் முடிவானது, அத்துடன் அத்தீர்மானம் எந்த நீதி மன்றத்திலும் கேள்விக்குட்படுத்த முடியாது" என குறிப்பிட்டது.

அர்ஜுன் காபன் மை தயாரிக்கும் சிறிய அளவிலான கைத்தொழில் ஒன்றை கொண்டிருந்தான். வர்த்தகமானியில், EPL தேவைப்படுத்திய ஒரு செயற்திட்டமாக இக்கைத்தொழில் குறிப்பிடப்பட்டிருந்தது. முன்னைய வர்த்தமானியில் அவனுடைய கைத்தொழில் குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை.

அரஜுன், அமைச்சருக்கு, தன்னுடைய அதிகாரங்களை ஒரு குழுவுக்கு கையளிப்பதற்கு அதிகாரம் இல்லை என்ற அடிப்படையின் மீது அமைச்சருடைய திர்மானத்தை ஆட்சேபித்தான். அவன், அமைச்சர் அவரை ஆளும் பொருளளவான விதிகளுக்கு எதிராக செயற்பட்டுள்ளார் என வாதிட்டான். மேலும், ஆணைக்குழுவினுடைய உறுப்பினர்களுள் ஒருவர் அரசியல் காரணங்களுக்காக தன்னுடன் நல்ல உறவில் இல்லை எனவும் குறிப்பிட்டான்.

அமைச்சருடைய தீர்மானம் வலுவிகழ்ந்தது என்ற அடிப்படையில் அமைச்சருடைய தீர்மானத்தை ஆட்சேபிக்க முடியுமா?

ஐக்கிய இராச்சியம், இலங்கை ஆகியவற்றினுடைய நியாயாதிக்கங்களை கருத்தில் கொள்ளும்போது அர்ஜுன் வலிதான வாதம் ஒன்று இருக்கிறது என நீர் கருதுகிறீரா? ஆராய்க.

4. இரண்டில் ஏதேனும் ஒன்றை,

சில்வா எதிர் இத்தமல் கொட(SL 471/2000 SCM 8.8.2003) என்ற உயர்நீதிமன்ற வழக்கு தீர்ப்பின் துணைகொண்டு, வழக்கீடு தகைமை தொடர்பாக இலங்கையின் நீதித்துறை அணுகுமுறையை விளக்குக.

இத்துறையினுடைய அபிவிருத்தியை உலகின் ஏனைய இரு நியாயாதிக்கங்களுடன் ஒப்பிட்டு ஆராய்க.

<u>அல்லது:</u>

2005ல் பாடசாலை(அனுமதி) சட்டத்தின் பிரிவு 1 கல்வி அமைச்சின் செயலாளருக்கு தனது கருத்தில் "பொது கல்விசார் வாய்ப்புகளுக்கான சம அணுகல்" என்பதை உறுதிப்படுத்துகின்ற எந்த பாடசாலையினதும் அனுமதிக்குரிய அளவுகோல்களை தீர்மானிக்க அதிகாரம் வழங்கி இருந்தது. இச் சட்டம் இந்த அளவுகோள்களுக்கு எதிராக எந்த ஒரு நபருக்கும் மேன்முறையீடு செய்வதற்கான எந்த ஒரு பொறிமுறையையும் வழங்கவில்லை; அல்லது செயலாளர் தனது தீர்மானத்திற்கு காரணம் வழங்க வேண்டும் எனவும் தேவைப்படுத்தவில்லை. செயலாளர் தனது தீர்மானத்தை மேற்கொள்ள முன்னர் அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் பொற்றோர்களை கலந்து ஆலோசிக்க வேண்டுமென குறிபிட்டு இருந்தது.

2005ஆம் ஆண்டு மே மாதம் செயலாளர் கொழும்பிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட 50 விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு தீர்மானித்தார். செயலாளர் தன்னால் குறிப்பிடப்பட்ட அனுமதிக்கான தேவைப்பாடுகளை விண்ணப்பதாரர்கள் திருப்திப்படுத்தவில்லை என கூறினார். மேலும் இப்பாடசாலையில் இவ்விண்ணப்பதாரிகளுக்கு வெற்றிடங்கள் இல்லையெனவும் ஏன்

எனில் இப்பாடசாலை ஏற்கனவே தேவைப்படுத்தப்பட்ட மாணவர் தொகையை விட அதிகமான மாணவர்களை கொண்டுள்ளது எனவும் செயலாளர் குறிப்பிட்டார். ஒவ்வொரு விண்ணப்பத்தையும் நிராகரித்த தீர்மானத்திற்கான தகுந்த காரணங்கள் வழங்கப்படவில்லை. இதற்கு மாறாக அண்மையில் இலங்கை பல்கலைக்கழக கல்வி ஆராய்ச்சி அமைப்பினால் மேற்கொண்ட ஆய்வு ஒன்றிலே இங்கு குறிப்பிடப்பட்ட பாடசாலை தேவைப்படுத்தப்பட்ட மாணவர் உள்வாங்கலில் பின்னிலையில் உள்ளது எனவும் அங்கு வளங்கள் தேவைக்கதிகமாக இருக்கிறது எனவும் சிபார்சு செய்தது. செயலாளர் தனது தீர்மானத்தை மேற்கொள்ள முன்பு அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுடன் கலந்தாலோசிக்க வில்லை.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாடிக்கையாளர் அனைவரும் உம்மை அணுகி அவரகள் அனைவரும் செயலாளருடைய தீர்மானத்தை ஆட்சேபிக்க தமக்கு வழக்கிடு தகைமை உண்டா என அறிந்து கொள்ள விரும்புகின்றனர்.

(அ) பல வருடங்களாக இலவச கல்வியை பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற பொது மக்கள் விடுதலைக்கட்சி;

(ஆ) தனது இரட்டை மகள்மார்களை அப்பாடசாலையில் சேர்க்கும் நோக்குடன் குறிப்பிட்ட பிரதேசத்தில் விலை உயர்ந்த வீட்டை தற்போது வாங்கியுள்ள பியதாச மொஹொட்டி என்பவர்

இச்சந்தரப்பங்களின் கீழ் உமது வாடிக்கையாளர்களுக்கு வழக்கிடு தகைமையை வழங்க முடியுமா என்பதைப்பற்றி ஆலோசனை வழங்குக

5. சிவப்பு விளக்கு அணுகுமுறை (Red light Approach) நீதிமன்றங்கள் நிர்வாக தீர்மானங்களை மீளாய்வு செய்வதற்கு ஒரு வலுவான பங்களிப்பை எடுத்துரைக்கிறது. இது சட்டத்தின் செயற்பாடு, அரசினுடைய அளவுக்கதிகமான அதிகாரங்களை கட்டுப்படுத்த வேண்டும் என கருதுகிறது. பச்சை விளக்கு அணுகுமுறை(Green light Approach), நிர்வாகச் சட்டத்தின் செயற்பாடு, அரச செயற்பாடுகளுக்கு உதவி (அனுசரணை) வழங்க வேண்டும் என கருதுகிறது.

ஆராய்க.

6. நிர்வாக நடவடிக்கைகளின் நீதி முறை மீளாய்வின் அடிப்படை அடித்தளம் சட்டவாட்சி மற்றும வலு வேறாக்க கோட்பாடு போன்ற அரசியலமைப்பு கொள்கைகளின் மீது அமைந்துள்ளது.

மேற்போந்த கூற்றை நீர் எவ்வாறு நியாயப்படுத்துவீர்? ஆராய்க.

7. கடந்த சில பத்தாண்டுகளிலே இலங்கை அமைப்பில் நீதிமுறை அல்லது நீதிமுறையற்ற நிர்வாகச் சட்ட பரிகாரங்களில் பொதுமக்கள் அணுகுமுறை எவ்வாறு மாற்றமடைந்துள்ளது என்பதை விமரிசித்து மதிப்பிடுக.

8. 1978ம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 126ன் கீழ் நிர்வாக அல்லது நிறைவேற்றுதுறை நடவடிக்கைகளை அடிப்படை உரிமைகள் மீறல் என்ற அடிப்படையில் கேள்விக்குட்படுத்தலாம். நிர்வாகச் சட்டத்தின் கீழ் பகிரங்க அலுவலர்களுடைய பங்களிப்பையும் அடிப்படை உரிமைகள் துறையில் அவர்களுடைய பங்களிப்பையும் எவ்வாறு நீர் வேறுபடுத்துவீர்?

ஆராய்க.

(பதிப்புரிமை பெற்றது)